JUDICIAL FORM NO.53
{See Rule-42}
DEPOSITION OF WITNESS
(CHATPTER XXIII CRPC).
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, TENKASI.
Case No.CC.618/2024
PW3

| | | | |
|---|---|---|---|
| பெயர் | பெருமாள் | தாலுகா | தென்காசி |
| கணவர் பெயர் | ஆண்ட பெருமாள் | தொழில் | விவசாயம் |
| கிராமம் | பேராமணி | வயது | 55 |

Solemnly affirmed in accordance with the provision of the oaths Act,1969 (Central Act 44 of 1969) on the Thursday 07.05.2026

(எதிரிகள் ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர். அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜர்)

முதல் விசாரணை:–

நான் தற்போது பேராமணியில் குடியிருந்து வருகிறேன். நான் விவசாய வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். என் பக்கத்து வீட்டுக்காரர்கள். அசா.1 வடிவு என் அக்கா. அசா.2 செல்வி என் மனைவி. சாட்சிகள் ஐயப்பன், சுப்புக்குட்டி ஆகியோர்களை தெரியும். சாட்சி ஐயப்பன் இறந்து விட்டார். தேதி, மாதம் நினைவில் இல்லை. கடந்த 7 வருடங்களுக்கு முன்பு மாலை 7 மணியளவில் எங்கள் வீட்டிற்கு அருகில் வைத்து எதிரி மாணிக்கம் என் அக்காவின் கையை பிடித்து திருக்கினார். எதிரி பிரபாகரன் அரிவாளை கொண்டு வந்து என் அக்கா வடிவின் தலையில் கொத்தி விட்டார். பின்னர் நான் இருசக்கர வாகனத்தில் என் அக்காவை அம்பாசமுத்திரம் அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றேன். போலிசார் என்னை விசாரித்தனர்.

எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். குறுக்கு விசாரணை செய்ய வாய்ப்பு வழங்கப்பட்டும் குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை.

Typed down to my dictation in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness in the presence of the accused and admitted by the witness to be correct.

//Sd//– Tmt.S.Muthulakshmi
Judicial Magistrate,
Tenkasi

JUDICIAL FORM NO.53
{See Rule-42}
DEPOSITION OF WITNESS
(CHATPTER XXIII CRPC).
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, TENKASI.
Case No.CC.618/2024
PW2

| | | | |
|---|---|---|---|
| பெயர் | செல்வி | தாலுகா | தென்காசி |
| கணவர் பெயர் | பெருமாள் | தொழில் | கூலி |
| கிராமம் | பேராமணி | வயது | 44 |

Solemnly affirmed in accordance with the provision of the oaths Act,1969 (Central Act 44 of 1969) on the Thursday 07.05.2026

(எதிரிகள் ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர். அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜர்)

முதல் விசாரணை:–

நான் தற்போது பேராமணியில் குடியிருந்து வருகிறேன். நான் கூலி வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். என் வீட்டிற்கு வடக்கு வீட்டுக்காரர்கள். அசா.1 வடிவு என் அம்மா. சாட்சிகள் ஐயப்பன், பெருமாள், சுப்புக்குட்டி ஆகியோர்களை தெரியும். சாட்சி ஐயப்பன் இறந்து விட்டார். தேதி, மாதம் நினைவில் இல்லை. கடந்த 2019ம் வருடம் மாலை 5 மணியளவில் நான் என்னுடைய வீட்டில் என்னுடைய பிள்ளைகளை திட்டி கொண்டிருந்தேன். அப்போது எதிரிகள் அவர்களை பேசுவதாக நினைத்து என் அம்மாவை வீட்டிற்கு முன்பு உள்ள தெருவில் வைத்து தேவுடியா, பலவெட்ர என திட்டினார்கள். ஏன் அவ்வாறு பேசுகிறீர்கள் என்று கேட்டதற்கு எதிரி மாணிக்கம் அவ்வாறு தான் பேசுவோம் என கூறி அவரது மகன் பிரபாகரனிடம் அரிவாளை கொடுத்தார். எதிரி மாணிக்கம் என் அம்மாவின் கையை பிடித்து திருக்கினார். எதிரி பிரபாகரன் அரிவாளை கொண்டு என் அம்மாவின் உச்சந்தலையில் வெட்டி விட்டார். பின்னர் என் கணவர் பெருமாள் என் அம்மாவை இருசக்கர வாகனத்தில் மருத்துவமனைக்கு அழைத்து சென்றார். போலிஸார் என்னை விசாரித்தனர்.

எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். குறுக்கு விசாரணை செய்ய வாய்ப்பு வழங்கப்பட்டும் குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை.

Typed down to my dictation in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness in the presence of the accused and admitted by the witness to be correct.

//Sd//– Tmt.S.Muthulakshmi
Judicial Magistrate,
Tenkasi

JUDICIAL FORM NO.53
{See Rule-42}
DEPOSITION OF WITNESS
(CHATPTER XXIII CRPC).
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, TENKASI.
Case No.CC.618/2024
PW1

| | | | |
|---|---|---|---|
| பெயர் | வடிவு | தாலுகா | தென்காசி |
| கணவர் பெயர் | சுப்புக்குட்டி | தொழில் | கூலி |
| கிராமம் | பேராமணி | வயது | 70 |

Solemnly affirmed in accordance with the provision of the oaths Act,1969 (Central Act 44 of 1969) on the Thursday 07.05.2026

(எதிரிகள் ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர். அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜர்)

முதல் விசாரணை:–

நான் தற்போது பேராமணியில் குடியிருந்து வருகிறேன். நான் கூலி வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். என் பக்கத்து வீட்டுக்காரர்கள். சாட்சி ஐயப்பன் என் தம்பி மகன். சாட்சி செல்வி என் மகள். சாட்சி பெருமாள் என் மருமகன். சாட்சி சுப்புக்குட்டி என் கணவர். தேதி, மாதம் நினைவில் இல்லை. கடந்த 7 வருடங்களுக்கு முன்பு மாலை 6 மணியளவில் எங்கள் வீட்டு பக்கத்தில் உள்ள ரோட்டில் என் மகள் அவரது குழந்தைகளை பேசிய போது எதிரி அழகு பிரபாகரன் வீட்டில் இருந்து வந்து எதற்காக என்னை பற்றி பேசுகிறீர்கள் என்று கேட்டார். அப்போது எதிரி பிரபாகரன் என்னை பார்த்து தேவுடியா, பலவேட்ர என்று கெட்ட வார்த்தைகளால் பேசினார். எதிரி மாணிக்கம் என்னுடைய வலது கையை பிடித்து திருக்கி அரிவாளை தூக்கி கொண்டு வா இவளை வெட்டி விடுவோம் என கூறினார். எதிரி பிரபாகரன் அரிவாளை கொண்டு என்னுடைய நடு உச்சந்தலையில் வெட்டி விட்டார். பின்னர் எனக்கு மயக்கம் வந்து விட்டது. பின்னர் என் பிள்ளைகள் அங்கு ஓடி வந்து என் முகத்தில் தண்ணீர் தெளித்தனர். பின்னர் என் தம்பி பெருமாள் இருசக்கர வாகனத்தில் அம்பாசமுத்திரம் அரசு மருத்துவமனைக்கு சென்றேன். நான் சிகிச்சையில் இருந்த போது மறுநாள் போலிசார் அங்கு வந்தார்கள். என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கைரேகை என்னுடையது தான். புகார் வாக்குமூலம் நான் கொடுத்தது தான் மேற்படி புகார் வாக்குமூலம் அசாஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலிஸார்

என்னை விசாரித்தனர்.

எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். குறுக்கு விசாரணை செய்ய வாய்ப்பு வழங்கப்பட்டும் குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை.

Typed down to my dictation in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness in the presence of the accused and admitted by the witness to be correct.

//Sd//– Tmt.S.Muthulakshmi
Judicial Magistrate,
Tenkasi